4. அரசின் தீர்மானம்

(1) தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை நடத்துதல் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23(1)வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது" என்ற தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23(1)வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் பிற்பகல் மாலை 3-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 11.25)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அவை மீண்டும் பிற்பகல் 3-30 மணியளவில் கூடியது

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(3) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஆளுநர் அவர்கள் தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டமுன்வடிவை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.